# எனக்கு கவிதை முகம்

`

முனைவர் அ. ராஜராஜேஸ்வரி

## இக்கால இலக்கியம்
## முதுகலை முதலாமாண்டு  18 MTA 11C

### அலகு - 1 கவிதை (அ)

### உடலின் கதவு - குட்டி ரேவதி

உடலின் கதவு என்னும் இக்கவிதையின் ஆசிரியர் குட்டி ரேவதி (ரேவதி சுயம்பு லிங்கம் (அல்லது) மருத்துவர் எஸ். ரேவதி) சென்னையை வசிப்பிடமாகக் கொண்ட ஒரு பெண் கவிஞர் ஆவார். கவித்துவமும் சிந்தனைத் தெளிவும் நிறைந்தவர். எழுத்து, பெண்ணியம் போன்றவற்றில் முனைப்புடன் இயங்கி வருகின்றார். இவர் ஒரு பாடலாசிரியர், கவிஞர், சீர்திருத்தவாதி மற்றும் ஒரு மருத்துவர் ஆவார். இவர் மூன்று கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் பனிக்குடம் என்னும் பதிப்பகம் ஒன்றையும் நடத்தி வருகின்றார். இதில் பெண் இலக்கியவாதிகளின் படைப்புகள் மட்டுமே வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. இவரே இந்த காலாண்டு இலக்கியப் பத்திரிக்கையின் தொகுப்பாசிரியர் ஆவார். இதுவே தமிழகத்தின் முதல் பெண்ணிய செய்தி இதழாகும். சாதிய மறுப்பும் ஒழிப்பும் தான் பெண்ணுடலை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் என்ற உணர்வுடன் தலித் பெண்ணியத்தை நுணுக்கமான மொழியில் சித்தாந்தப் படுத்தி வருபவர் இன்றைய தமிழகத்தில் உருவெடுத்த பெண் கவிஞர்களின் 'உடல் அரசியல்' மொழியும் எழுச்சியும் முக்கியமான பங்களிப்பு என்கின்றார்.

**ஆசிரியர் குறிப்பு:-**

பிறப்பு [15-6-1974] திருவெறும்பூர்
ஊர்: திருவெறும்பூர் தற்பொழுது இருப்பது சென்னை
தந்தை: சுயம்புலிங்கம் [பி.ஹெச். எல். நிறுவனத்தில் கடைநிலை ஊழியர்]
பள்ளிப்படிப்பு: ஆர். டபுள்யூ. சி. ஏ என்னும் [திருவெறும்பூர்] தமிழ் பயிற்றுப் பள்ளி.

உடன் பிறப்பு : தம்பி, தங்கை

பொழுது போக்கு : பி. ஹெச் எல் - குடியிருப்பிலிருந்த நூலகம்

பள்ளித் தோழிகள் : வசந்தி, ஜோதி, மீனா என மூன்று நெருங்கிய தோழிகள்

மேற்படிப்பு: இளவரை மருத்துவத் துறையில் (சித்த மருத்துவம்)

எழுதத் தொடங்கிய காலகட்டம்: 1990களில் எழுதத் தொடங்கினார்.

**கவிதை நூல்கள்**

* பூனையைப் போல அலையும் வெளிச்சம் (2000)
* முலைகள் (2000)
* தனிமையின் ஆயிரம் இறக்கைகள் (2003)
* உடலின் கதவு (2006)
* யானுமிட்ட தீ (2010)
* மாமத யானை (2011)
* இடிந்த கரை (2012)
* அகவன் மகள் (2013)
* காலவேக மத யானை (2016)
* அகமுகம் (2018)

**சிறுகதை நூல்:**

* நிறைய அறைகள் உள்ள வீடு (2013)

**கட்டுரை நூல்:**

* காலத்தைச் செரிக்கும் வித்தை (2009)

**விருதுகள்:**

* இந்தியா டுடே என்ற பத்திரிக்கையால் வழங்கப்பட்ட எதிர்கால இலக்கியத்தின் முகங்கள் (சிகரம் 15) என்ற விருதினைப் பெற்றுள்ளார்
* சாகித்ய அகாதமி அமைப்பால் (2005)ல் இந்தியாவில் உள்ள இலக்கியவாதிகளை சந்திப்பதற்கான உதவித் தொகையைப் பெற்றவர்.

**பணிகள்:**

* 'பனிக்குடம்' எனும் இலக்கிய இதழின் ஆசிரியர்
* 'பெண்ணீர் திரைப்படங்கள்' குறித்துத் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்
* 'பெண்கள் திரைப்பட' இயக்கமான 'கண்ணாடி'யில் முனைப்பாகப் பங்கு கொண்டுள்ளார்
* சில செய்திப் படங்களின் இணை இயக்குநராகப் பணியாற்றி உள்ளார் தற்பொழுது இணை இயக்குநராக உள்ளார்
* ஆங்கிலக் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார்

* சிறந்த புகைப்படக் கலைஞர்.
* 'பெண் எழுச்சியை மையமாகக் கொண்ட 'இரசாயன ரோஜாக்கள்' ஆல்பத்தில் 'ஏ.ஆர். ரஹ்மான் இசையில் இந்த்ரசித், ரிஹானாவின் குரல்களில் 'என்னுள் ஒரு மாய ஒளியோ' என்றொரு பாடலை எழுதியிருக்கின்றார்.
* 'மரியான்' திரைப்படத்தில் இரண்டாண்டுகளுக்கு மேலாக குட்டி ரேவதியும் இணை இயக்குநராகப் பணியாற்றியதோடு ஒரு பாடலையும் எழுதியுள்ளார்.
* பெண் இயக்குநர்களுடன் இணைந்து, 'ஹாலி வுட் தாது' என்னும் திரைப் பட தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார்.

உடலின் கதவு:-

இக்கவிதையின் தலைப்பைப் பார்த்தவுடன் இக்கவிதை உறுப்பைச் சார்ந்தது என்று எண்ணுவார்கள். ஆனால் அது ஒரு சொல்லாக, ஒரு முத்தமாக, ஒரு அனுபவமாக, நல்ல கலந்துரையாடலாக இருக்கலாம். தலைப்பிற்கும் கவிதைக்கும் கவிதைத் தலைப்பிற்கும் பொருத்தம் அவ்வளவாக இல்லை. ஆனால் தலைப்பின் சாயலை பல கவிதைகள் கொண்டுள்ளன.

"உடலெங்கும் நீர்மொக்குகளுடன் அவள்
எழும்பி வருகையில்
ஒரு மொக்கும் முறியாது நாவால்
பறித்துக்
கனிகளாக்கி உண்பேன்
நீரலை கரையேறி சறுக்குவதைப்போல்
அவள் இதயத்தின் பெருஞ்சுவாசம்
மார்புகளின் மீது அலையெனப்
புரண்டடங்கும்
உள்ளங் கைகளை அகலவிரித்து
இலையின் நுனியோடு உந்தியை
விரித்துக் கொடுப்பாள்.
ஒரு கிளி கவ்வியிருக்கும் கனியைப்போல
தன்னுடலைத் தானே
ஏந்தி வந்து என்னிடத்தில் வழங்குவாள்.

**1990 களின் நடுப்பகுதியிலிருந்து** அனார் **என்ற புனைபெயரில் எழுதும்** இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம் **ஈழத்து தமிழின் நவீன கவிதைகளுக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார்.**

---

ஒவ்வொரு பரவசத்தின் கேள்வி மற்றவர்
இருந்துக் காப்போம்..."

மேலும் ஞானியின் மனதைத் திறக்கிறது உன்
நினைவின் பெருக்கு என்பதனை

" உனது நினைவின் மரபு
ஒரு மழைக்காலத்தின் நினைவாய்
ஆர்ப்பரிப்பாய்
வெளிச்சம் விரிக்கிறது என் நெஞ்சில்
பிரகாசங்களில்
தொங்கும் சொந்த தோட்டமுடன்
நீரை சுழிக்கத் திமிறும் ஒரு பகுதியில்
நீர் பரிக்கிறது அது...
......
ஒரு அற்புதமான திறப்பினைக்
கண்டு கொள்கிறது
தெரியாதவர்களை இயக்கத்தடாமல்
இருக்கட்டும்
நேற்று மாலை
திறக்கைகள் நூலைக்கண்ணாடியில் திக்காத
பறவையைப் போல
பீடமும் நேரு உடலை
சிறகும் ஒவ்வொரு நொடியும்
கனவுகளையக் கொடுக்கட்டும்.
ஒரு நாள்
ஞானியின் மனதைத் திறக்கிறது உன்
நினைவின் பெருக்கு.

இவருடைய கவிதைகள் காலம், உணர்வு சார்ந்ததாகவே உள்ளது. இவர்கள் அனைத்தும் உள் மனத்துடன் தொடர்புடையவை. இது தனி மனித மனம் சார்ந்தது. மேலும் இவை மரபுகளை உடைப்பதாக உள்ளது. ஆனந்தனை கட்டமைத்த தமிழ் வாழ்வை தன் கவிதைகளில் பழமொழிகளாகவும், கிளிகளாகவும் காட்சிப்படுத்தியுள்ளார் என்பது மிகையாகாது.

**கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் பிறந்து வாழ்ந்துவருபவர். 1990 களின் நடுப்பகுதியிலிருந்து** அனார் **என்ற புனைபெயரில் எழுதும்** இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம் **ஈழத்து தமிழின் நவீன கவிதைகளுக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார். கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் பிறந்து வாழ்ந்துவருபவர். 1990 களின் நடுப்பகுதியிலிருந்து** அனார் **என்ற புனைபெயரில் எழுதும்** இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம் **ஈழத்து தமிழின் நவீன கவிதைகளுக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார். கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் பிறந்து வாழ்ந்துவருபவர்.**

# இவரது நூல்கள்

- ஓவியம் வரையாத தூரிகை (மூன்றாவது மனிதன் வெளியீடு, 2004)
- எனக்குக் கவிதை முகம் (காலச்சுவடு வெளியீடு, 2007)
- உடல் பச்சை வானம் (காலச்சுவடு வெளியீடு, 2009)
- பெருங்கடல் போடுகிறேன் (காலச்சுவடு வெளியீடு, 2013)
- பொடுபொடுத்த மழைத்தூத்தல் (க்ரியா வெளியீடு, 2013)
- ஜின்னின் இரு தோகை (காலச்சுவடு வெளியீடு, 2017)

# விருதுகள்

- 1999 - தேசிய இளைஞர் சேவை விருது - கொழும்பு
- 2002 - இளம் படைப்பாளி விருது (உலக இஸ்லாமிய இலக்கிய மாநாடு) - கொழும்பு
- 2005 - அரச சாஹித்திய மண்டல விருது - கொழும்பு
- 2005 - வட-கிழக்கு மாகாண இலக்கிய விருது - திருகோணமலை
- 2007 - கம்பன் கழகத்தின் மகரந்தச் சிறகு விருது - கொழும்பு
- 2011 - கனடா தமிழ் இலக்கியத் தோட்ட கவிதை இயல் விருது - ரொறண்டோ, கனடா
- 2013 - Award for Excellence in the Filed of Literature (விஜய் தொலைக்காட்சியின் - சிகரம் தொட்ட பெண்கள் விருது) - சென்னை
- 2015 - Sparrow Literary Award - Mumbai
- 2017 - ஆத்மாநாம் இலக்கிய விருது, சென்னை

**எனக்கு கவிதை முகம்**

ஈழத்துக் கவிதைகளின் பிரிநிலை அலகாக எண்பதுகளில் கிளைத்து விரிந்த பெண்களின் கவிதைகளுள்ளன. தீவிரமான பெண்ணிலைவாதச் சிந்தனைகளுடனும் பெண்மொழிப் பிரக்ஞையுடனும் கட்டமைக்கப்படும் பெண்களின் கவிதைகள் பொருளாலும் ஆழத்தாலும் தனித்த அடையாளத்தை நிலைநிறுத்தியுள்ளன. ஆண்மையச் சமூகத்தில் விளிம்பு நிலைக் கூறாக இருக்கும் பெண், கால காலமும் சட்டமிட்டப்பட்ட வாழ்க்கை முறைகளையும், ஆண்களால் வடிவமைக்கப்பட்ட அனுபவக் கூறுகளையும் பால்நிலைக் கற்பிதங்களையுமே தன் அடையாளங்களாகக் கொண்டிருந்தாள். இந்த வட்டச் சுழற்ச்சியின் மையத்தைத் தகர்த்துக் கொண்டு பெண்களின் படைப்புக்கள் மேற்கிளம்பியிருக்கின்றன.

வன்முறைகள் உக்கிரம் பெற்ற எண்பதுகளில் பல பெண்கள் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களின் கவிதைகளில் வன்முறையின் ஆறாத காயங்கள் தீவிரமாக வெளிப்பட்டன. கைதுகள், காணாமல்போதல், வன்புணர்ச்சி, சித்திரவதை, விதவையாக்கப்படல் என நீளும் துயர்களின் வலிகளும் பெண்கள், ஆண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் ஒடுக்கு முறைகளும் கவிதைகளின் பொருள்களாயின. நம்பிக்கையீனங்களும் நிச்சயமின்மைகளுமே பெரும்பான்மைக் கவிதைகளிலும் உள்ளோடிக் காணப்பட்டன.

ஊர்வசியின் இடையில் ஒரு நாள் என்ற கவிதை

விடியலில்

கருக்கல் கலைகிற பொழுதில்

எனக்கு கிடைத்த

தற்காலிக அமைதியில்

நான் உறங்கும் போது,

ஒரு முரட்டுத்தனமான

கதவுத் தட்டலுக்குச் செவிகள்

விழிக்கும்

பிறகு

கூந்தல் விழுந்து விழுகின்ற வரையில்

விசாரணை

என்னருகே அம்மாவும்

கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட

ஒரு அணில் குஞ்சைப்போல

நீ போய் விட்டாய்

நாள் தொடர்கிறது.'

என முடிகின்றது. இக்கவிதை எண்பதுகளின் நெருக்கடி மிக்க சூழலை சித்தரிக்கின்றது. புதல்வர்கள் வீட்டை விட்டு வெளியேறுவதும் அதன்பின் நிகழுகின்ற ஏனையவர்களின் இருப்பின் நிச்சயமின்மைகளையும் தாய்மையின் ஏக்கத்தையும் பரிதவிப்பையும் இயல்பாக வெளிப்படுத்துகின்றது.

பெண் மொழி என்பது பெண்ணுடலை கொண்டாடுதலோ ஆணுக்கெதிராக குரலெழுப்புவதோ மட்டுமல்ல பெண்ணின் இருப்பில் அர்த்தத்தையும் அவளின் எல்லையற்ற வெளியையும் கோரி நிற்கும் மொழிப்பிரக்ஞை. இந்தப் பிரக்ஞையுடனேயே சமகால ஈழப் பெண்களின் கவிதைகளை அணுக வேண்டும்.

அனார் சமகாலத்தில் கவிதைகள் எழுதும் முக்கியமானவர். இவரின் கவிதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. முதற் தொகுதியான 'ஓவியம் வரையாத தூரிகை' மூன்றாவது மனிதன் (2004) வெளியீடாகவும் இரண்டாவது தொகுதியான 'எனக்கு கவிதைமுகம்' காலச்சுவடு (2008) வெளியீடாகவும் வந்துள்ளன

அனாரின் 'எனக்கு சவிதை முகம்' கவிதைத் தொகுதி அவரின் முதற் தொகுப்பிலிருந்து அவரை முதிர்ச்சி மிக்க கவிஞராகக் காட்டுகின்றது. மொழிக் கையாள்கையிலும் பொருட்செறிவிலும், உணர்த்துதலிலும் தனித்தன்மை பெற்றிருக்கின்றது. இத்தனித்துவமே இத்தொகுப்பு கவிதைகளின் மீதான ஈர்ப்புக்கு காரணமாகின்றது.

தொகுதியிலுள்ள முதற் கவிதையான "மண்புழுவின் இரவு" என்ற கவிதை

'நீளமான நூலாய் தெரிகின்றது இரவு

நான் தனித்த மண்புழு

சிறுகச் சிறுக நீளுகின்றேன்

தொடர்ந்து நீளமான வெள்ளை நூல் தெரியும்வரை' என முடிகின்றது.

கவிதை பெண்ணின் உயிர்ப்பை அழகியல் சார்ந்த தருணங்களினூடாக கட்டுறுப்புச் செய்கின்றது. பெண்ணின் தவிப்பையும், அவாவையும் கூறுகின்றது எனினும் இக்கவிதையின் மேற்காட்டப்பட்டுள்ள இறுதி வரிகள், விடுதலையை அவாவி நிற்கும் பெண்மனப் பிரதிபலிப்பாக வெளிப்படுகின்றன. இரவை நீளமான நூலாககாண்பதும்; பகலை நீளமான வெள்ளை நூலாகக் காண விளைவதும் புதுமுறை அனுபவத்தின் முகங்கள். பெண்ணை மண்புழுவாகக் காட்டுவது அனார் கையாளும் சமூக வாழ்வியல் சார் குறியீட்டு உத்திக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. மண்புழு விவசாயத்திற்கு உதவும் ஒரு உயிரியாகும். ஆயினும் அதனது அருவருப்பான தோற்றம் எல்லோராலும்; புறக்கணிக்கப்படுவதற்கு காரணமாகின்றது. இவ்வாறே சமூக முன்னேற்றத்திலும் அசைவியக்கத்திலும் பெண் பங்காளியாக இருக்கின்றாள். ஏனினும் ‘ஆண்மை’ என்ற சொல்லின் மாயப் புனைவுருவாக்கம் அவளை இரண்டாம் நிலையாக சிறுமைப்படுத்தும் போக்கை மிகவும் யதார்த்த பூர்வமாக அனார் வெளிப்படுத்துகின்றார்.

‘பிச்சி’ என்னும் கவிதை பாலுணர்வுப் பகிர்வு சார்ந்த கவிதையாகும். ஆணின் பாலியல் மேலாண்மையை உள்வாங்கிக்கொண்டு கவிதை விரிந்து செல்கிறது. இந்தக் கவிதையிலுள்ள

‘அறைக் கண்ணாடியில் பாம்பின் கோடுகள்

ஆதி மந்திரமாய் உறைகின்றன’

‘பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை

புலன்களை ஸ்பரிசிக்கின்றது’

போன்;ற வரிகளில் ஆதி மந்திரம் எது என்பதும் பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை எது என்பதும் ஆழமான கேள்விகளை எழுப்புகின்றன. ஆண்வழிச் சமூக அமைப்பில் ஆணே பெண்ணின் பாலுணர்வுகளையும் தீர்மானிப்பவனாகவும் இருக்கின்றான். ஆண் பெண்ணை தன் மோகத்திற்கான பாத்திரமாக கையாளும் விதத்தை மேலுள்ள கவிதையின் வரிகள் புலப்படுத்துகின்றன. இது நீண்ட நெடுங்காலமாக பால்நிலை விதியாக தொடர்வதை ஆதிமந்திரம், பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை போன்ற சொற்களில் வெளிப்படுகின்றது. இன்னொரு விதத்தில் ஆதிமந்திரம், இசை போன்றவை பெண்ணை வசியப்படுத்தும் ஆண் தந்திரத்தை குறியீடாக உணர்த்துகின்றன. இதனை உறுதிசெய்வது போலவே

‘கடல் திறக்கும் கள்ளச் சாவிகளென

பத்து விரல்கள்’ என்னும் வரி அமைகின்றது.

இவ்வரிகளைத் தொடர்ந்து வரும்

‘காற்றின் அதிர்வுகளில்

பளிச்சிடுகின்ற மயக்க இழைகள்

விரிகின்றன ஒவ்வொன்றாய்

குளிர்ந்து.................’. என்கிற வரிகளும் வசியப்படுத்தலுக்கான வினையாற்றுதலை முன் நிறுத்துகின்றன.

அனார், தன் கவிதைகளில் சொற்களை உரிய விதத்தில் அர்த்தப் பாங்குடன் பயன்படுத்துகின்றார். இயற்கை அவரின் கவிதைகளில் புதுப்புது வகையிலாக அர்த்தம் கொள்கின்றது பெரும்பான்மைக் கவிதைகளும் இவ்வாறமைபவையே. இயுற்கையின் மாற்றங்களை, பருவமாற்றங்களை புதிர்களை, புதுமைகளை வாழ்வியற் கூறாக படிமமாக்குகின்றார். இது அனார் கருதும் அர்த்தங்களிலிருந்தும் வாசகனுக்கு மேலும் அர்த்தங்களை கண்டடைவதற்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்துகின்றன.

‘நேர்த்தியாக வளர்க்கப்பட்ட புற்தரையில்

குருவிகள்

நீர்த்துளிகளில் ஜொலிக்கும் சூரியனைக் கொறிக்கின்றன.’

(எட்டமுடியாத அண்மை)

‘பசுமையின் உச்சமாகி நான் நிற்கின்றேன்

வேர்களின் கீழ் வெள்ளம்

இலைகளின் மேல் ஈரம்

கனவு போல பெய்கின்ற உன்மழை’

(மின்னல்களைப் பரிசளிக்கும் மழை)

‘விடிந்தும் விடியாத

இக்காலைக் குளிரில்

முகை வெடித்த பூக்களின் காதுகளுக்குள்

கோள் மூட்டுகின்றது

பெயர் தெரியாத ஒரு காட்டுப் பூச்சி

(எனக்கு கவிதை முகம்)

இவ்வாறு பல வரிகளில் இயற்கையைத் தன் கருத்தேற்றத்திற்கான கூறாக அனார் பயன்படுத்துகின்றார். வெறுமனே அழகியற் சொற்களாக இவ்வரிகள் இருக்காது பொருள் மிகுந்தவையாக முதன்மை பெறுகின்றன.

அனாரின் ‘அரசி’ என்ற கவிதையும் ‘நான் பெண்’ என்ற கவிதையும் பிற பல கவிதைகளிலிருந்தும் மாறுபடுபவை. இவை பெண்ணின் இருப்பின் அர்த்தத்தை நிறுவ விழைகின்றன. அரசி கவிதை “குரல் என்ற நதி அல்லது திராட்சை ரசம்’ என்ற கவிதையில் முன் நிறுத்தும் ‘அந்தப்புரத்தின் அரசி’க்கு நேர்மாறானவளாக காட்டப்படுகின்றாள். அந்தப் புரத்தின் அரசி, குரல் என்னும் திராட்சை ரசத்தினால் கட்டுண்டு போகிறவளாக இருக்க ‘அரசி’ கவிதையில் வரும் அரசி பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான பிரகடனங்களை முன்மொழிபவளாகவும் தனது, ‘பெண்’ என்னும் அடையாளத்தை ஓங்கியறைந்து வெளிப்படுத்துகிறவளாகவும் இருக்கின்றாள்.

‘உன் கனவுகளில்

நீ காண விரும்புகிறபடியே

நான் அரசி

அயல் நாட்டு மகாராஜாக்களின் அரியணைக்கு

சவால் விடும் பேரரசி

அடி பணிய அல்ல

கட்டளையிடப் பிறந்தவள்’

(அரசி)

ஏனத் தன் குரலை உயர்த்தும் போது ஆண்கள், பெண்களைக் காண விரும்பும் ‘இல்லத்தரசி’ என்ற பதத்தை கேள்விக்குட்படுத்துகின்றாள்;. தன்னைப் பேரரசியாகப் பிரகடனம் செய்கின்றாள். இக் கவிதையின் இறுதி வரிகள்

‘கைகளிரண்டையும்

மேலுயர்த்திக் கூவுகின்றேன்

நான்

நான் விரும்புகிறபடியான பெண்

நான் எனக்குள் வசிக்கும் அரசி’

என முடிகின்றன. இவு;வரிகள் பெண்ணின் சமூக விடுதலைப் பிரகடனத்தை ஒலிக்கின்றன. ஆண்களால் பெண்களுக்கெனத் தீட்டி வைக்கப்பட்டிருக்கும் சட்டங்களை தகர்த்து ஒலிக்கும் குரல், தன்னைத் தீர்மானிக்கும் ஆதார சக்தியாக தன்னை வெளிப்படுத்துவது. சமூகத் தடைகள் மிக்க சமூகத்திலிருந்து வெளிப்படும் இக்குரல் ஆழ்ந்த கவனிப்பிற்குரியது. பர்தாக்களை விலத்தி நிமிரும் குரலாக வெளிப்படுகின்றது.

அரசி கவிதையின் இன்னொரு ஆக்கப் பிரதியாகவே'நான் பெண்' என்னும் கவிதையுள்ளது. இது பெண்ணை இயற்கையின் பேருருவாக காண்கின்றது.

ஒரு கட்டாறு

ஒரு பேரருவி

ஓர் ஆழக்கடல்

ஓர் அடைமழை

நீர் நான்

கரும் பாறை மலை

பசும் வயல் வெளி

ஒருவிதை

ஒரு காடு

நிலம் நான்

நானே ஆகாயம்

நானே அண்டம்

எனக்கென்ன எல்லைகள்

நான் இயற்கை

நான் பெண்'

(நான் பெண்)

இக்கவிதையில் இயற்கையின் அனைத்து வடிவமாகவும் அனார், பெண்ணைக் காண்கிறார். மனிதர்களால் விளங்கிக் கொள்ள முடியா புதிர் நிரம்பிய இயற்கையாக பெண்ணை பரிமாணம் கொள்ள வைக்கின்றார். இப்பரிமாணம் பெண், உலகின் உள்முகச் சக்தியாக எப்போதும் விளங்கும் விதத்தை கொள்வதாக அமைகின்றது.

இத்தொகுப்பிலுள்ள 'மேலும் சில இரத்தக் குறிப்புக்கள்' என்ற கவிதை ஏனைய கவிதைகளிலிருந்து தனித்துத் தெரிகின்றது. பிற கவிதைகளிற் பலவும் ஆண், பெண் எதிர்பால் உறவு நிலையை மையப்படுத்தியேயுள்ளன. ஆனால், இக்கவிதை தாய்மையின் அடித்தளத்திலிருந்து வளர்ந்து கோபுரமாகின்றது. வன்முறைகளின் வடுக்களை மானிடப் பெருந்துயராகக் காட்டுகின்றது.

கவிதையின் ஆரம்பவரி பெண்ணின் உடலியல் இயற்கையாக இருக்கும் மாதவிடாய் பற்றிய இயல்போடு தொடங்குகின்றது. மாதந்தோறும் குருதி காண்கின்ற போதும் குழந்தையின் விரலில் குருதி காணும் போது ஏற்படும் அதிர்ச்சியையும் வலியையும் தாங்கமுடியாத தாய்மையின் உணர்வு நிலையிலிருந்து காட்டுகின்ற போதும், இந்த உணர்வு நிலை தன்குழந்தை என்னும் நிலை கடந்து வன்முறையாலும் போராலும் இறக்கும், வலியுறும் உயிர்களுக்கான கருணையின் கண்ணீராகப் பீறிடுகின்றது.

அனாரின் பிற கவிதைகளில் இல்லாத துயரத்தின் வலியும், இயலாமையின் கண்ணீரும் மனக்குலைவின் சிதறல்களாய்த் தெறிக்கின்றன.

'வன்மத்தின் இரத்தவாடை

வேட்டையின் இரத்த நெடி

வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்

கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்

சாவின் தடயமாய்

என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது’

என முடியும் ’மேலும் சில இரத்தக்குறிப்புக்கள்’ கவிதை தொடர்ந்து கொண்டிருக்கும் மனிதப் பேரவலத்தின் சாட்சியாக நிற்கின்றது. வன்கல்வி, சித்திரவதைகள் என்றாகிவிட்ட எமது காலத்தின் முகப் பிரதிபலிப்பாக இருக்கின்றது.

அனாரின் ‘எனக்கு கவிதை முகம்’ தொகுப்பிலுள்ள பல கவிதைகளும் காதலை முன் நிறுத்துபவை. ஆண், பெண் உறவின் ஆதார ஊற்றாகக் காதலும் காமமும், தாபமும் கலந்து உருப்பெறும் கவிதைகள் என இவற்றை வரையறை செய்யமுடியும். ஆயினும் அனார் இருவகையாக தன் உணர்வுகளை காதல் சார்ந்த கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார். முதலாவது கேள்விகளோடு ஆணையும் அவனது காதலையும் எதிர்கொள்வது. இரண்டாவது, தனணுணர்வு நிலையில் குழைந்து ஆணையும் அவனது காதலையும் கேள்விகளற்று ஏற்றுக்கொள்வது. இவ்விரு தன்மைகளுடனும் வெளிப்படும் இக்கவிதைகளில் பெண்ணின் துயரையும் அவளது மறுக்க முடியா மேன்மையையும் பதிவு செய்கின்றார்.

# மாலதி மைத்திரி

.

சங்கராபரணி (2001), நீரின்றி அமையாது உலகு (2003), நீலி (2005), எனது மதுக்குடுவை (2012), முள்கம்பிகளால் கூடு பின்னும் பறவை (2017), கடல் ஒரு நீலச்சொல் (2019) என்பவை இவரது கவிதைத் தொகுதிகள். விடுதலையை எழுதுதல் (2004), நம் தந்தையரைக் கொல்வதெப்படி (2008), வெட்டவெளி சிறை (2014) என்பவை இவரது கட்டுரை நூல்கள். பறத்தல் அதன் சுதந்திரம் (2004) மற்றும் அணங்கு (2005) நூல்களின் தொகுப்பாசிரியர்.

ப[பகுப்பு:தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்]]

புதுச்சேரியில் வாழும் இவர் 1968 -ஆம் ஆண்டு பிறந்தார். முதல் சிறுகதை “பிரயாணம்” 1988 ஆம் ஆண்டு கணையாழியில் வெளிவந்தது. இதுவரை சங்கராபரணி(2001), நீரின்றி அமையாது உலகு(2003), நீலி(2005) ஆகிய கவிதைத் தொகுப்புகளும், விடுதலையை எழுதுதல், தந்தையைக் கொல்வதெப்படி என்ற கட்டுரை தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. ‘சங்கராபரணி’ தொகுப்பின் மூலம் திருப்பூர் தமிழ்ச் சங்கம் விருதும், புதுவை அரசின் கம்பன் விருதும் பெற்றிருக்கிறார். தொடர்ந்து இலக்கியம், சமகால அரசியல் மற்றும் மனித உரிமைத் தளங்களில் இயங்கிக் கொண்டிருப்பவர். ‘அணங்கு’ எனும் பெண்ணிய இதழின் ஆசிரியராக முனைப்புடன் செயல்பட்டவர். ‘அமீபா’ என்ற சிற்றிதழை நடத்தியுள்ளார். கிரணம் வெளியீட்டகத்தின் பதிப்பாளர். ஒரு சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலராக இருந்து, அதிலிருந்து எப்படி ஓர் எழுத்தாளராக உருவானார் என்பதை மாதந்தோறும் நடக்கும் கேணி சந்திப்பு வாசகர் கூட்டத்தின் மூன்றாம் ஆண்டு துவக்க விழாவில் “நானும் என் எழுத்தும்” என்ற தலைப்பில் பகிர்ந்துகொண்டார். எழுத்தாளராக தன்னை அடையாள படுத்திக் கொள்வதைவிட மனித உரிமை ஆர்வலராக முன்னிறுத்திக் கொள்வதையே முக்கியமாகக் கருதுகிறார். அந்த எண்ணமே எழுத்தை நோக்கி நகர்த்தியது என்கிறார்இவருடைய தாய் மனநலம் குன்றியவர் என்பதால் முழுமையான குழந்தைப் பருவத்தை அனுபவிக்க முடியாமல் புறக்கணிக்கப்பட்ட குழந்தையாகவே வளர்ந்திருக்கிறார். இவரைத் தொடர்ந்து 6 குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். தாயையும் சேர்த்து உடன் பிறந்த சகோதர சகோதிரிகளையும் பராமரிக்க வேண்டிய பெரும் பொறுப்பு இவர் தலையில் விழுந்திருக்கிறது. அவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இதனால் “சுயத்தைப் பற்றியே சிந்திக்காமல் பிறரைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய நிர்பந்தம் சமூக விழிப்புணர்வை நோக்கி என்னை கொண்டு சென்றது”” என்றார். தம்பி, தங்கைகளை பள்ளிக்கு அனுப்புவது, உடல் நிலை சரியில்லாத பொழுது அவர்களை கவனத்துடன் பார்த்துக் கொள்வது மற்றும் பிரச்சனைகளை நேர்கொண்டு சமாளிக்க வேண்டிய சூழ்நிலைகளால் இவருடைய ஆளுமை வளர்ந்திருக்கிறது. அதன் மூலம் எந்த ஒரு விஷயத்தையும் முன்னெடுத்துச் செல்லும் துணிவையும் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் பெற்றிருக்கிறார். எனவே “புறத்தாக்குதல்கள் இல்லா நிழலில் குழந்தையை சுதந்திரமாக வளரவிடுங்கள். அவர்களே தங்களை ஆரோக்கியமாக வளர்த்துக் கொள்வார்கள்” என்கிறார். யாரையும் சாராது கட்டற்று சுதந்திரமாக வளர்ந்த தனது உடன்பிறப்புகளையே இதற்கு உதாரணமாகக் கூறுகிறார். புற வன்முறைகள் இல்லாமல் வளர்ந்ததால் மட்டுமே சாத்தியமானது. அப்படி ஏதேனும் நடந்திருந்தால் வேறுமாதிரி வளர்ந்திருப்போம் என்பதையும் ஒத்துக்கொள்கிறார். சோழர்களின் கட்டுமானத்தில் உருவாக்கப்பட்ட பெரிய கிராமம் வில்லியனூர். 11-ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட பெரிய கோவில் அங்கிருக்கிறது. கோவிலை சுற்றி அக்ரஹாரம், மேலவீதி, செட்டியார் தெரு, உடையார் தெரு, வன்னியத் தெரு, நாவிதர் தெரு என்று சாதிப் படி நிலைப்படி கடைசியில் சேரி அமைந்திருந்தாலும் வண்ணாரும் நாவிதர்களும் வசிக்கக் கூடிய தெரு

இவர்களுடையது. இவருடைய சாதியினர் நேரடித் தீண்டாமைக்கு உள்ளாக்கப் படவில்லை என்றாலும் சாதிப்பெயர் சொல்லி அழைக்கும் முறை கிராம பழக்கத்தில் இருந்திருக்கிறது. அண்டை வீட்டார் சாதம் வாங்குவதற்கு மேல்குடி தெருவிற்கோ அல்லது வேலை செய்யும் வீட்டிற்கோ செல்லும்போது கூடவே இவரும் செல்வாராம். ‘படுகளம்’’ என்ற கவிதையில் அதனைக் காட்சிப் படுத்தியிருப்பார்.

*தெரு வாசலில் வெளிச்ச*
*சட்டத்துக்கு அப்பால் நின்று*
*குரலெடுப்போம்*
*அம்மா அன்னம் போடுங்க*
*கூடப்படிக்கும் பொடிசுகள்*
*எட்டிப்பார்த்துவிட்டுச் செல்லும்*

நம்முடைய பாட திட்டங்கள் தீண்டாமையை மறுக்கிறது. ஒரே பாரத தேசம், எல்லோரும் சமம்’ என்று பாடத் திட்டம் போதிக்கிறது. சட்டமும் அதை உறுதி செய்கிறது. கற்பிக்கும் விழுமியத்திலிருந்து முரண்பட்ட சமுதாயத்தைத் தானே காண நேரிடுகிறது. விளிம்புநிலை மனிதர்களின் மீது திணிக்கப்படும் வன்முறைகளும், ஒடுக்குமுறைகளும் கவிதை வரிகளில் பதிவாகிறது.

*ஏகாலி வந்திருக்காம்மா...*
*அம்பட்டவன் வந்திருக்காம்மா...*
*தோட்டி வந்திருக்காம்மா...*
*சக்கிலி வந்திருக்காம்மா...*
*குடிப்புள்ள வந்திருக்காம்மா...*

படியளப்பவர்கள் என்ன சொன்னாலும் பொறுத்துக்கொள்ள வேண்டிய இயலாமையை பின்வருமாறு சொல்லியிருப்பார்.

*ண்டி உன் அப்பன், ஆத்தா வரலியா*
*ஒனக்கு நேரங்காலமே தெரியாதா*
*இப்பத்தான் சாப்பிடப்போறோம்*
*இருட்டுல நின்னு பூதங்காக்காதே*
*தோட்டத்துப்பக்கமா வந்து ஓரமா நில்லு*

எட்டு வயதிலிருந்து இதுபோன்ற அனுபவங்கள் கிடைத்ததால் சாதியானது எவ்வளவு மூர்க்கமாக இந்த சமுதாயத்தின் மேல் தனது பிடியை கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார். பொருளாதாரத்தில் உயர்ந்திருக்கும் மேல்சாதியிரனால் ஒடுக்கப்பட்டு ஓரமாக நின்ற நாட்களை நினைத்து மனித தர்மத்தை விசாரணைக்கும் உட்படுத்துகிறார். முடிவில் புனிதமானதாகக் கற்பிக்கப்படும் தர்மங்களை பழகிய விலங்குககளாக்கி பிச்சைப் பாத்திரத்தில் கிடத்துகிறார்.

*உடலே பெரும் பிச்சைப் பாத்திரமாக*
*வாய்ப்பிளந்து நிற்கிறோம்*
*எல்லாக் காலங்களுக்குள்ளும்*
*எல்லாத் தர்மங்களும்*
*நமது பாத்திரத்தில்*
*இடப்படுகின்றன*
*அவை ஒரு பழகிய*
*விலங்கெனப் படுத்திருக்கிறது*

தொலைதூர கிராமத்தில் இருந்ததால் பெண்கல்வி என்பதும் இவருடைய சமுதாயத்தில் கவனிக்கப் படவேண்டிய விஷயமாக இருக்கவில்லை. பெண் குழந்தைகளின் கல்விக்கு அவர்களுடைய தந்தைகளே முட்டுக் கட்டையாக இருந்திருக்கிறார்கள். கிராமத்தின் முதலியார் சமூகத்திலும் பெண்கள் ஒடுக்கப் பட்டிருக்கிறார்கள். வரதட்சனையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மன அழுத்தத்தாலும், மன நோயாலும் தவித்திருக்கிரார்கள். இதனால் முதிர் கன்னிகள், வயோதிகத் திருமணம், தற்கொலை போன்ற பெண்ணிய சிக்கல்கள் உருவாகியிருக்கிறது. “வீடுகளால் ஆன இனம்” என்ற கவிதையில் பெண்கள் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறை சார்ந்து பதிவு செய்திருப்பார்.

*ஊரின் அனைத்து வீடுகளும்*
*நடப்பட்ட பெண்களென நிற்கின்றன*
*சாளரங்கள் கண்களாகவும் வாசல் யோனியாகவும்*
*யாரோ ஒரு ஆணிற்காக*
*ஆயுள் முழுவதும் காத்துக்கிடக்கின்றன*
*வயதுக்கேற்றபடித் தம் உறவுகளுக்காக*
*கொலைகாரன் திருடன்*
*குடிகாரன் துரோகி மோசடிக்காரன்*

*ஊழல் செய்பவன் ஏமாற்றுபவன் விபச்சாரன்*
*கொடுங்கோலன் காமவெறியன்*
*சாதிவெறியன் மதவெறியன் இனவெறியன்*
*இவர்கள் யாரையும் வீடு கைவிட்டுவிடுவதில்லை*
*அவரவருக்கான வீடு எப்போதும் இருக்கிறது*

பொருளாதாரத்தால் நலிவுற்ற மற்றும் படிப்பறிவில்லாத பெண்களின் திருமணங்கள் விருப்பத்துக்கு மாறாகவே நடைபெறுகின்றன. ஆண்களின் தேவைகளுக்காக பலியாகும் பெண்களின் வலியை பெண்ணை வீடாக உருவகிக்கும் அதே கவிதையில் பின்வருமாறு சாடியிருப்பார்.

*உடம்பு தொட்டிலாகவும் மார்பாகவும் இருந்து*
*உயிரும் உணவும் அளித்து*
*அரவணைத்துப் பாதுகாக்கப்படும் ஆண் பந்தங்கள்*
*ஆண்கள் வீட்டைப் புணர்வதன் மூலம்*
*பூமியை வளர்க்கிறார்கள்*
*பெண்களையல்ல*
*காலத்தை ஆளும் பெண்கள் வீடாவதில்லை*

வன்முறை மற்றும் இதர காரணங்களால் ஒப்பாரி வைக்கும் பெண்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்ததால், எல்லாவற்றையும் ரட்சிக்கும் ‘கடவுள்’ என்ற விழுமியத்தின் மீதான கேள்வி எழுந்திருக்கிறது. கடவுள் இருந்தால் “எளிய மக்களின் கஷ்டங்களை தீர்க்க வேண்டும் இல்லையா? கடுமையாக உழைக்கக் கூடிய இவர்களுக்கு ஏன் நிம்மதி கிடைப்பதில்லை? இவர்களுக்கு ஏன் முன்னேற்றம் வாய்க்கவில்லை?” போன்ற விசாரணைகளின் முடிவில் கடவுள் மறுப்பாளராக மாறியிருக்கிறார்.

சுயநலமாக தானுண்டு தன் வேலையுண்டென வாழ்ந்தால் பிரச்சனை இல்லை. மனித அக்கறையும், சூழல் மீதான அக்கறையும் இருக்கும்போது “நாம் நாமாக இருக்க முடியாது””, மனித அக்கறை இருந்ததால் “நான் நானாக இருக்க முடியவில்லை”” என்கிறார்.

இந்திராகாந்தி எமர்ஜென்சி மற்றும் மொராஜி தேசாய் காலத்தில் ஏற்பட்ட பாண்டிச்சேரி இணைப்பு போராட்டத்தை ஒட்டியே அரசியலைத் தெரிந்து கொள்ளும் ஆவல் மாலதிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆண்கள் எல்லோரும் செய்தித்தாள் வாசிக்கும் பொழுது “நாம் ஏன் படிக்கக் கூடாது?”” என்ற எண்ணம் எழவே மாலை நேரங்களில் டீக் கடையில் இருந்து தினத்தந்தியை கடன்பெற்று படிக்க ஆரம்பித்திருக்கிறார். ஈழத்தில் தீவிரமான அரசியல் போராட்டம் நடைபெற்ற 1983-ஆம் ஆண்டுகளில் சிறை உடைப்பு, குட்டிமணி, ஜெகன் கண் பறிப்பு” போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் நடைபெற்ற பேரணிகளில் மாணவர் அணியில் பங்கெடுத்ததின் மூலம் தி.க மாணவர்களின் பரிட்சயமும் ஏற்பட்டிருக்கிறது.

வயதிற்கு வந்த பெண்களை வீட்டைவிட்டு வெளியில் அனுப்ப தயங்கும் காலத்தில் இலக்கிய சந்திப்பு, தர்ணா, போராட்டம், உண்டி குளுக்குதல்’ போன்ற காரணங்களுக்காக பல இடங்களுக்கும் சென்று வந்ததால் “பெண்களின் களம் என்ன? எப்படி ஒடுக்கப்படுகிறார்கள்? சுற்றிலும் என்ன நடக்கிறது?”” என்பதையெல்லாம் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறார். சிறுவயதிலேயே குடும்ப பொறுப்பைப் பார்த்துக் கொண்டதால், பெரியவர்களின் தடையில்லாமல் சுதந்திரமாக செயலாற்ற முடிந்திருக்கிறது.

வீதியிலேயே ஆண்களும் பெண்களுமாக சரிசமமாக விளையாடி, ஒரே தட்டில் சாப்பிட்டு, தெருவிலேயே உறங்கும் அளவிற்கு சுதந்திரமாக இருந்தாலும், குடும்ப அமைப்பில் பெண்கள் மீது வன்முறை திணிக்கப்பட்டுள்ளது என்கிறார். சராசரி குடும்பங்களைவிட அதிகப்படியான அடக்குமுறைகள் இயக்கத்தில் ஈடுபட்ட தோழர்களின் வீடுகளில் இருந்திருக்கிறது. எப்பொழுதாவது “தோழர், உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்களேன். எல்லோரையும் பார்க்க வேண்டும்” என்று கேட்டால், “அதெல்லாம் சரிவராது” என்று மறுத்து விடுவார்களாம்.

அப்படியே சென்றாலும் அம்மா, அக்கா, தங்கை என வீட்டிலுள்ள எல்லா பெண்களும் ஆளுக்கொரு மூலையில் ஓடி ஒளிந்து கொள்வார்களாம். “என்ன தோழர்? மனித உரிமையைப் பற்றி பேசுகிறீர்கள், உங்கள் வீட்டிலேயே இப்படி இருக்கிறதே?” என்று கேட்டு அவர்களை கேலியும் செய்வாராம்.

இவர்களெல்லாம் மனித உரிமை பேசினாலும், மார்க்சியம் பேசினாலும், குடும்ப சூழல் என்று வரும்போது ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட ஆண்களுக்கான அதிகாரத்தை அனுபவிக்கவே செய்கிறார்கள். திராவிட கழகத் தோழர்கள் தான் இப்படி என்று நினைத்தால், புரட்சி பேசக்கூடிய மாக்ஸிய தோழர்களின் குடும்ப சூழலும் அதேபோலத் தான் இருந்திருக்கிறது. இதுபோன்ற அவதானிப்புகளால் இயக்கம் சார்ந்த கனவுகள் தகர்ந்து, அதிகார அரசியலை அடையாளம் கண்டிருக்கிறார். ஒரு கலாச்சார மாற்றத்தையோ, பெண்களுக்கான சுதந்திரத்தையோ, இடத்தையோ கொடுக்க முன்வராதவர்களை எதிர்த்து பெண்களே போராடவேண்டும் என்ற புரிதலுக்கு வந்திருக்கிறார். அந்த காலகட்டத்தில் தான் தீவிரமாக எழுதவும் ஆரம்பித்திருக்கிறார். தி முருகன் (குங்குமம் இணை ஆசிரியர்), நாகு, சரவணன், அருணன், தி சிவக்குமார், ‘எதிரு’ சிவக்குமார் போன்ற

நண்பர்களுடன் சேர்ந்து கையெழுத்துப் பிரதி துவங்கி, அதில் சில ஆரம்ப கவிதைகளை எழுதியிருக்கிறார். அதன் பின் ‘எதிரு’ பத்திரிகையை எழுத்தாளர் பாவணன் துணைகொண்டு முன்னெடுத்திருக்கிறார்கள்.

இலக்கியம் சார்ந்து இயங்குவதைவிட மாக்ஸிய, ML கூடங்களில் பங்கெடுப்பது காவல் துறையில் பணியாற்றுவதால் மாலதியின் தந்தைக்கு அலுவலக நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. “இலக்கியக் கூட்டங்களுக்கு வேண்டுமானால் கலந்துகொள். போலீஸ்காரனின் மகளாக இருந்து கொண்டு தடைசெய்யப்பட்ட இயக்கங்களுடன் தொடர்பு கொள்ளாதே, தர்ணா, உண்டி குளுக்குதல், சோசியலிச புரட்சி போன்ற செயல்பாடுகளில் பங்கெடுக்காதே” என்று சொல்லி இருக்கிறார்.

“எதை செய்ய வேண்டும்? எதை செய்யக் கூடாது?” என்று எனக்குத் தெரியும். “என் சமந்தப்பட்ட விஷயங்களில் முடிவெடுக்கும் உரிமை உங்களுக்கு இல்லை” என்று மாலதியும் பதிலளித்திருக்கிறார்.

“அப்போ நீ கல்யாணம் செய்துக்கிட்டு போயிடு”

“இப்போ நான் கல்யாணம் செய்துக்கிற மாதிரி இல்லை”

“உன்கூட எவ்வளோ தோழர்கள் பழகுறாங்க, அவங்கள்ள ஒருத்தரை வேணும்னாலும் கல்யாணம் பண்ணிக்கோ…”

“இதென்ன வேடிக்கையா இருக்கு? என்னுடன் பேசுபவர்கள் எல்லோரும் என்னுடைய காதலராகிவிடுவாரா? எல்லாரையும் நான் கல்யாணம் செய்துக்க முடியுமா?” என்று மாலதி பதில் சொல்ல, “அப்போ வீட்டை விட்டு வெளிய போயிடு” என்று அவருடைய தந்தை சொல்லியிருக்கிறார்.

20 வயதில், வீட்டைவிட்டு வெளியேறி தனியாக வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. 11 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது ஏற்பட்ட தீவிபத்தால் பள்ளிக்கு செல்வதை பாதியில் நிறுத்தி இருக்கிறார். வங்கிக் கடன் பெற்று வீட்டைக் கட்டி முடிப்பதற்குள் மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டது. மீண்டும் வீட்டிலிருந்தே படிக்கலாம் என்றபோது அறிவியல் மற்றும் கணிதப் பாடத்தைத் தவிர்த்து, வரலாறு பாடத்தை எடுத்து தேர்ச்சி பெற்றிருக்கிறார்.

ஓய்வு நேரத்தில் நூலகம், தோழிகளின் வீடு, இலக்கியக் கூட்டம்” என்று பொதுவாக சுற்றிக் கொண்டே இருப்பாராம். நூலகத்திற்கு வரும் பெண்கள் தேவையான புத்தகத்தை எடுத்துக் கொண்டு சென்றுவிட இவர் மட்டும் அங்கேயே உட்கார்ந்து படிப்பாராம். வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்தால் அவருடைய அம்மா கிழித்து எரித்து விடுவார்களாம். எல்லா விதத்திலும் இலக்கிய வாசிப்புக்கான இடையூறுகளைக் கொடுப்பார்கள். இதிலிருந்து தப்பிப்பதற்காக பத்தாம் வகுப்பு விடுமுறையில் மூன்றுமாத தையற் பயிற்சியில் சேர்ந்திருக்கிறார். வீட்டிலிருந்து வெளியேறியதும் ஒரு வேலை கிடைக்க அதுவே காரணமாக இருந்திருக்கிறது. எக்ஸ்போர்ட் கம்பெனி, ஸ்வீட் ஸ்டால், ஜவுளிக் கடை போன்ற பல இடங்களில் 1988 –ஆம் ஆண்டு முதல் சொற்ப சம்பளத்திற்கு (200 ரூபாய், 300 ரூபாய்) வேலை செய்திருக்கிறார்.

கடுமையான உழைப்பின் மூலம் அனுபவம் பெற்று ஆரோவில் நூல் கத்தரிக்கும் பெண்ணாகச் சேர்ந்து Tailoring மற்றும் pattern making கற்றுக்கொண்டு லெதர் ஜாக்கெட் டிசைன் செய்யும் அளவிற்கு முன்னேறியிருக்கிறார். அவருடன் வேலை செய்தவர்கள் எல்லோரும் 40 முதல் 50 வருட அனுபவமும் கல்விச் சான்றிதழ் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இணையாக உழைத்திருக்கிறார். இதனால் தன்னம்பிக்கை பெற்று முன்னேறினாலும் 6 வருடங்கள் எழுத்தில் கவனம் செலுத்த முடியாத சூழலில் வாழ்ந்திருக்கிறார்.

அவர் வேலை செய்த இடங்களிலேயே தோல் ஆடை தொழிற்சாலையில் வேலை செய்ததையே கடினமான பணியாகக் கூறுகிறார். “ஆயிரம் நபர்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் சுகாதாரமே இருக்காது. பல வேதி மாற்றங்கள் தொழிற்சாலையில் நிகழும் என்பதால் காற்றில் துர்நாற்றம் பரவும். சாப்பிடவே முடியாது. அங்கு வேலை செய்பவர்களுக்கு எடைக்குறைவு, நரம்பு வியாதிகள், தோல் வியாதி, TB என ஏதாவது உடல் நலக் குறைவுகள் ஏற்படும். சில பெண்களுக்குக் கருச்சிதைவும் ஏற்படுவதுண்டு. இதையெல்லாம் விட கீழ் நிலைகளில் வேலை செய்யும் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப் படுவார்கள்” என்றார்.

CPM, CPI போன்ற தொழிலாளர் இயக்கங்கள் இருந்தாலும் இதையெல்லாம் கவனிக்காது. அவர்களுக்கு சந்தா கிடைத்தால் போதுமென்று இருந்துவிடுவார்கள். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான உறவு தவிர்த்து மார்க்ஸிய அரசியல்வாதிகள் உள்ளார்ந்த விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை. ஓர் அளவிற்கு மேல் இந்த சூழலில் வேலை செய்ய முடியாமல் தவித்திருக்கிறார். அதைத் தொடர்ந்து மீண்டும் எழுத்த ஆரம்பித்திருக்கிறார்.

மூன்று பிரிவான எழுத்துகள் இளைஞர்களுக்கு ஒரு குழப்பத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. எழுத்து, மணிக்கொடி’ போன்ற சிற்றிதழ் காலங்களிலிருந்து எழுத்தானது இரண்டு வகைகளில் பார்க்கப்பட்டது. கலை, இலக்கியம்” என்று ‘எழுத்து’’ படைப்பாளிகள் உயிரை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களுக்கான மாற்றத்தை நாங்கள் தான் கொடுக்கிறோம். எங்களுடையது தான் சிறந்த எழுத்து என்று ‘வானம்பாடி’கள்’ சொல்கிறார்கள். புரட்சி சார்ந்து பேசக்கூடிய மாக்ஸிய ஆளுமைகளும் செயல்படுகிறார்கள்.

“வாழ்வியலும், அரசியலும் பிரிக்கமுடியாதது. இவை இரண்டும் இல்லாமல் இயங்க முடியாது. நம் சார்ந்த சமூகம், அதிலுள்ள பிரச்சனை, மாற்றம், நசிவுகள், ஒடுக்கு முறைகள், பெண்களின் கனவுகள், அவர்களின் இருப்பு, உணர்வுத் தளங்கள்” ஆகியவையை தன்னுடைய எழுத்தில் கொண்டு வருவதாகவும் அரசியல் தவிர்த்து தன்னுடைய எழுத்தை வாசிக்க இயலாது என்றும் சொல்கிறார். சில எழுத்தாளர்களை அப்படி வாசிக்க முடியும். உள்மனப் பயணங்களை மட்டுமே பதிவு செய்திருப்பார்கள். அந்த வகைமையும் இருக்கிறது. அதுபோல எழுதுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. நம்முடைய அகமனப் பயணங்களை நாமே வைத்துக் கொள்ளலாமே வாசகர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும். வாசிக்கும் படைப்பின் மூலம் வாழ்க்கை பரிட்சியமாக பொது விஷயத்தைத் தானே பேசவேண்டும். ஒரு வாழ்க்கை முறையை எழுத்தின் மூலம் கடத்த முடியும். அப்படி இல்லாத ஒன்று எழுத்தாக இருக்க முடியாது” என்பதை முழுமையாக நம்புவதாகச் சொல்கிறார்.

1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

## 1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

## 2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது

போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

மாலதியின் கவிதைகளை பொதுவாக மூன்று வகையாக பிரிக்கலாம்

1. கவி அனுபவம் பெற்று எழுதப்பெற்றவை

2. இயற்கை / புற உலகு ஆராதனையை அழகிய வரிகளில் சொல்லமுனைபவை

3. ஒரு கவனிப்பை முன்வைப்பவை

சுழல், வேறு மழை, அம்மா ஆடு, சங்கராபரணி, யானைக்கதை, உடலுக்குள் ஒரு காடு, தேனீர் நேரம், ஆறாகி நின்றபோது, நீருக்கடியில் ஒரு வீடு ஆகியவற்றை கவியனுபவம் பெற்றவையாகச் சொல்லலாம்.

என் விழிப்பில் பச்சை சூரியன், இருளும் ஒளியும், அதனதன் உலகம், மயக்கம், ஒரு கரையின் தனிமை, தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல் ஆகியவை இரண்டாம் வகை.

மீன்காரி, அம்மாவும் மகளும், நரமாமிசர், குருட்டு வலி, கருப்பாயி ஆகியவை மூன்றாம் வகை.

முந்திரி காட்டுக்குள் யார் அம்மா என்ற கேள்வி, உடல் மிதப்பில் கரையற்ற விழிவானத்தைச் சாத்தியப்படுத்திய அன்றைய ஆறு, பாதி கரைந்த ஒரு தும்பிக்கை ஓராயிரம் தும்பிக்கைகள் கொண்ட வழக்காற்று கதையாய் ஆவது, வாழ்வின் தீராத பக்கங்களை எழுதிச்சென்ற பிரமிளின் பறவை மாலதியிடம் வானத்தை தன் இறகுகளில் சுருட்டிவைத்துக்கொண்டு நீ எங்கு போய்விடுவாய் என அமர்ந்திருப்பது போன்ற மாலதியின் கவித்துவ அனுபவங்கள் வாசகனுக்கும் அனுபவம் ஆவதில் எந்த சிக்கலும் இல்லை. மாலதியை இக்கவிதைகளைக் கொண்டே நினைவுக்கொண்டுவருவதும் உற்சாகத்தை தருகிறது.

தாய்-சேய் உறவை விடவும் மாலதியின் கவிதைகளில் அதிகம் கவனம் பெறுவது வறண்டு போன ஆறு மீீண்டும் உயிர் பெறுவதுபற்றி.(எ-கா: கொக்கை கவனித்துக்கொண்டேயிரு, ஆறாகி நின்றபோது, சங்கராபரணி) ஆற்றுவெள்ளத்தின் நுரைப்பு, தளும்பல், பொங்கிபாய்தல், மிதந்து செல்லும் அறை, ஆற்றின் ஏற்ற இறக்கம், முலைக்காம்பின் திரவம் ஆறாய் ஓடிக்கொண்டிருப்பது என திரும்பத் திரும்ப ஆற்றின் சக்திவாய்ந்த இயக்கத்தில் கவிஞருக்கு இருக்கும் ஆதர்சம் கவிதைகளில் வெளிப்படுகிறது. தாய்-சேய் உறவின் அனுபவம், தாய்மையின் அனுபவம் ஆகியவற்றிலும் கூட பருவமழையின் இடியோ மின்னல்கொடி அறுந்துவிழுந்த சடசட மழையோ இல்லாமல், கவிஞர் தீட்டமுனையும் சித்திரம் முற்றுப்பெறுவதில்லை.

‘காலத்தின் ஏழு முகங்களி ‘ல் காணமற்போன இளமைக்கால உன்னதங்களைத் (காணாமற்போன ஏழுவண்ண கூழாங்கற்கள்) தாண்டிச்செல்லும் வாழ்க்கையில் தேடும் மனது, புற உலகோடு முட்டிமோதி, இறுதியில் தன் சத்தியம் தனது உன்னதங்களை கரைசேர்க்கும் என்று ஆறுதல் கொள்கிறது.

‘காட்டுப்பாதை ‘யில் நான்X நீ எதிரீட்டை நான் X காடு /காட்டின் பாதைகள் என்று கொண்டால், ‘உன் பாதை மறிக்கப்படுமானால் ஓர் இலையைக்கூட கிள்ளாமல் கவனமாக வேறு திசை நோக்கித் திரும்பி விடுகிறாய் ‘ என்பதே தான் திசை தொலைந்து நின்றாலும் காட்டின்மீதான தொடர்கவர்ச்சிக்கு காரணமாகிறது.

வார்த்தைகளின் வாடை ‘ நாம் படித்த பழையவற்றின் கவர்ச்சியிலிருந்து வெளியேறும் எத்தனிப்பைச் சொல்வதாக எடுத்துக்கொள்கிறேன்.

‘மனக்கடலி ‘ல் கரையில்( நினைவில்) தேக்கிவைக்கப்படும் புதிய கனவுகள் ஆழ்மனதின் பழைய அனுபவ பாதிப்புகளுடன் சதா சுயப்பிரக்ஞையற்ற இயக்கம்(ஆமைகளின் விளையாட்டு) கொண்டிருப்பதைச் சொல்லிச்செல்கிறது.

‘மழை போகும் பாதை ‘யில் எழுத்துக்கான கணங்கள் சதா நம்மை கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. அந்த கணங்கள் காலஓட்டத்தில் எழுதப்பட்டவற்றை தன்னுள் கரைத்தும் புதைத்தும் சென்றுகொண்டிருக்கின்றன. பிறகு அந்த கணங்களும் பழசாகி, புதிய கணங்கள் பெய்து, அவையும் நம்மை கடந்து சென்றுகொண்டிருக்கின்றன.

‘மறைமுக அரங்கம் ‘ ஆணின் வன்முறைக்கெதிரான ‘அவனது விதையைப் பிடித்து இழுக்கும் ‘ செயல்பாட்டை நிகழ்த்த பெண்களை அழைக்கிறது. ஆணின் வன்முறைக்கெதிரான செயல்பாடு நாடக மேடையின் பிரச்சார தளத்தைவிட்டு, ஒவ்வொரு இல்லத்துக்குள்ளும் நிகழ்ந்தாக வேண்டியதன் தேவையை ஆணுக்கு மட்டுமேயல்லாமல் வன்முறையை சந்தித்திருக்கும் /சந்தித்திராத பெண்ணுக்கும்கூட அதிர்ச்சியூட்டும் வகையில் முன்வைக்கிறது. மிக கவனமாக, ஆக்ரோஷத்தைத் தவிர்த்து, கவிதைசொல்முறையிலேயே கவிதைப்பொருளை எடுத்துச்சென்று,

அதிர்ச்சியூட்டும் செயல்பாட்டிற்கான அழைப்பை கவிதை அனுபவத்திற்குள்ளாகவே நிறுவிக்கொள்கிறார். (முதல் வாசிப்பில் இந்த அதிர்ச்சி கவிதைஅனுபவம்தானா என்கிற ஐயத்தைமீறி, ஒரு இடைவெளிவிட்ட மூன்றாம் நான்காம் வாசிப்பிற்குப் பிறகு இந்த முடிவிற்கு வருகிறேன்)

‘கொக்கை கவனித்துக்கொண்டேயிரு ‘ கவிதையில் மிகச்சாதுவான பிராணியான கொக்கு கூட கொதித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நதி உயிர்பெறுவது என்பது கொக்கு தன் நினைவில் சுழித்தோடிக்கொண்டிருக்கும் நதியில் மூழ்கி சிறகை உதறுவதில் இருக்கிறது. ஒரு சமூக கட்டுமானத்தில், மிகச்சாதுவாய் தன் ஜீவனத்திற்கு இயற்கையை நம்பி இருக்கும் ஒருவன் சீரழிந்துபோயிருக்கும் தன் வாழ்வை மீட்டெடுக்க கைகொள்ளபோகும் முயற்சியில், நிகழப்போகும் மாற்றத்தை முன்னறிவிக்கிறது.

‘வார்த்தைகளால் என்ன செய்வீரி ‘ல் தன் சூழலுக்கு எதிராய் பேசிய (துண்டிக்கப்பட்ட) நாக்குகளையும், பேசப்படாத நினைக்கப்படாத வார்த்தைகளையும் பற்றிய தேடலையும் இந்த தேடல் தன் வாழ்வின் இருண்டபகுதிகளை கடக்க கைவிளக்காய் அமைவதையும் சொல்கிறது.

‘மந்திர கணத் ‘தில் உச்சரிக்கப்படாத ஒரு சொல் தனது பிரம்மாண்ட இருப்பின் மூலம் அனுபவமாகி, அது சிருஷ்டிக்கப்பட்டு, அதன் சக்தி மந்திரமாய் விளங்க, காலத்தை வெல்கிறது.

‘அம்மா ஆடு ‘ம் ‘அம்மாவும் மகளு ‘ம் ஒரே அனுபவத்தையே சொல்கின்றன. ஆனால், ‘யார் அம்மா ‘ என்ற கேள்வி எழுப்பும் அனுபவத்தை ‘முலைகளாய் பிதுங்கும் ஆலமரம் ‘ எழுப்பவில்லைதான்.

‘வேறு பாதை ‘யில் கவிதையின் மூலம் காணும் காட்சியில் எதுவாகவேணும் இருக்கலாம். பேசப்படாதவரை சாத்தியப்பாடுகள் அனந்தம். பலதடவை நடந்துபோய்வந்த பாதையைப்பற்றி இன்னொரு கவிதை எழுதப்பட முடியும்வரை, பாதைக்கும் முடிவில்லை.

‘விளிம்பிலிருந்து நழுவி ‘ தாய்மையின் முதல் அனுபவத்தையும் ‘பிரபஞ்ச தியானம் ‘ குழந்தை தாயின் பிரபஞ்சமாய் ஆவதையும் சொல்கிறது.

பெரும்பாலான கவிதைகளில் பொருள் மயக்கம் தரக்கூடிய வரிகள் (எவ்வளவு தனிமனித அனுபவமாய் இருந்தாலும்) தவிர்க்கப்பட்டிருக்கிறது. தன் அனுபவத்தின் நூதனத்தைக் கண்டுகொண்ட பார்வையையும், தனது அனுபவத்தின் உயிர்ப்பை தெளிவான வரிகளிலேயே சாதிக்க வேண்டும் என்கிற நிதானத்தையும் தொகுப்பு முழுக்க காணமுடிகிறது.

## பகுதி - அ

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1) குட்டி ரேவதி நடத்தும் பதிப்பகத்தினைக் குறிப்பிடுக.
2) குட்டி ரேவதியின் கவிதை நூல்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3) குட்டி ரேவதிக்கு இந்தியா டுடே கொடுத்த விருதின் பெயர் யாது?
4) "தாய்-சேய் உறவோடு - ஒன்றிப்போன ஆறு உயர்திணையாகு" பற்றி கூறும் கவிதை எது?
5) "வாழ்வின் இருண்ட பகுதிகளை கடக்க உதவுவதாக" எதனைக் குறிப்பிடுகின்றார்? ஏன்?
6) 'தாய்மையின் முதல் அனுபவத்தை' வெளிப்படுத்தும் மைத்ரியின் கவிதை எது? எவ்வாறு?
7) 'பெண்சார் திரைப்படங்கள்' குறித்துத் திறனாய்வுக் கட்டுரை எழுதிய கவிஞர் யார்?
8) 'ஜுரீஸ் பிர்பாச்சின்' வரிகளுடன் ஒப்பிடத்தக்க கவிதை எது? யாருடையது?
9) 'தீராத மரணங்களினால் முகமையைத் தொலைத்து உடைந்த கண்ணாடி ஆனது' யார்? ஏன்?
10) 'ஈழத் தமிழின் நவீன கவிதைக்குப் புது முகங்களைக் கொடுத்தவர்' - என்ற பெருமைக்குரிய பெண்கவிஞர் யார்? ஏன்?

## பகுதி - ஆ

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1) 'யோனியின் பதாகை' - 'கிணையின் பெருக்கெடுள்' ஒப்பிட்டுக் கூறுவதற்கான காரணம் யாது?
2) நெருப்புக் காடுகளில் பயணம் செய்யும் பெண்ணின் நிலைப்பாடாக கவிஞர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.
3) உடலின் தேவாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? அதற்கான காரணம் யாது?
4) மனித வாழ்வின் கொள்கை அனார் எதனுடன் ஒப்பிடுகின்றார்? ஏன்?
5) அனார் பழமொழிகளையும் தொன்மங்களையும் தம் கவிதைகளில் பயன்படுத்தும் பாங்கினை எடுத்துரைக்க.

6) [illegible] 'பெண்ணின் [illegible]' [illegible]

7) [illegible]

8) 'புதிய கோலங்கள்' - [illegible]

9) 'வார்த்தைகளால் [illegible]' - [illegible]

10) [illegible]

## பகுதி - இ

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1) [illegible]

2) [illegible]

3) [illegible] 'உடைந்த [illegible]' [illegible]

4) [illegible]

5) [illegible]

6) [illegible]

7) [illegible]

8) [illegible]

9) [illegible]

10) 'அமைதியின் நிழல் தான் உள்ளே இருக்கிறது' என்பதனை எனக்குக் கறைமுகம் என்ற கதையின் வழி நின்று விளக்குக.

— x —.